بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *11/07/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- **மக்கா வெற்றி போர் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை அம்சங்களின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய குறிப்பு**
- **தற்போதைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு துஆக்கள் செய்வதற்கும் ரேஷன் பொருட்களை சேமித்து வைப்பதற்குமான நினைவூட்டல்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாவில் கஅபாவின் திறவுகோல் உஸ்மான் பின் தல்ஹாவிடம் இருந்தது என்று கூறப்பட்டிருந்தது. மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் சிகாயா, அதாவது, தண்ணீர் வழங்கும் கௌரவத்தோடு, திறவுகோலை பாதுகாக்கும் கண்ணியமும் பெற வேண்டி விண்ணப்பித்தார்கள். அதாவது திறவுகோல் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று. ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கஅபாவில் இருந்து வெளியேறும் போது உஸ்மான் பின் தல்ஹாவை அழைத்து அவரிடம் திறவுகோலை திருப்பிக் கொடுத்துவிட்டு அல்யவ்மு யவ்முல் பிர்ரி வ வஃபா என்று கூறினார்கள். அதாவது, இன்று நன்மை மற்றும் உடன்படிக்கையை நிறைவேற்றும் நாளாகும் என்பதாகும். அச்சமயம் உஸ்மான் பின் தல்ஹா முஸ்லிமாக ஆகிவிட்டிருந்தார்.

ரஸூல் (ஸல்) அவர்கள் ஏன் அவ்வாறு கூறினார்கள் என்பதன் விளக்கம் இவ்வாறாகும். அன்னார் (ஸல்) ஹிஜ்ரத்துக்கு முன்பு ஒரு முறை உஸ்மான் பின் தல்ஹாவிடம் கஅபாவின் திறவுகோலை கேட்டதற்கு அவர் அன்னாரை திட்டினார். மேலும் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளை பயன்படுத்தினார். அன்னார் அச்சமயம் மிகவும் பொறுமையுடன் இருந்தார்கள். மேலும் உஸ்மானே! நினைவில் கொள்ளுங்கள். ஒருநாள் இந்த திறவுகோல் என் கைகளில் கிடைக்கும். மேலும் நான் நாடுபவரிடம் அதனை எனது விருப்பத்திற்கேற்ப கொடுப்பேன் என்று கூறினார்கள். உஸ்மான் அதற்கு, ஒருவேளை அப்படிப்பட்ட நேரம் வந்தால் அது குறைஷியர்களின் அழிவு மற்றும் இழிவுக்கான நேரமாக இருக்கும் என்று பதில் கூறினார். அதற்கு ரஸூல் (ஸல்) அவர்கள், “அவ்வாறில்லை, மாறாக அத்தருணம் குறைஷிகளின் நல்வாழ்வு மற்றும் கண்ணியம் நிலைபெற்றிருக்கும்” என்று கூறினார்கள்.

அச்சமயம் அன்னாருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் அனைத்தும் அன்னாருக்கு நினைவில் இருந்தன. அவ்வாறிருந்தும் அன்னார் அம்மக்கள் மீது கருணையையும் பரிவையும் காட்டினார்கள். அன்னார் “இந்த சாவியை என்றைக்குமாக வைத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் இருந்து அநீதியாளனே அதனை பிடுங்குவான். இப்போது இது உமது குடும்பத்தில் இருக்கும்” என்று கூறினார்கள். எனவே இன்று வரை கஅபா ஆலயத்தின் திறவுகோல் இந்த குடும்பத்தில் தலைமுறை தலைமுறையாக இருந்து வருகின்றது.

அறிவிப்பில் உள்ளது, மக்கா வெற்றியின் இரண்டாவது நாளில் பனூ ஹுஸாஆ, பனூ பதீலின் ஒரு இணைவைப்பவரை கொன்றுவிட்டது. எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் லுஹருக்குப் பிறகு குத்பா கொடுப்பதற்காக நின்றார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் அல்லாஹுத்தஆலாவின் புகழ் பாடினார்கள். பிறகு கூறினார்கள்: அல்லாஹுத்தஆலா மக்காவை வானங்கள் மற்றும் பூமியை படைத்த அந்நாளில் இருந்தே, மேலும் சூரியன் மற்றும் சந்திரனையும் படைத்த மற்றும் ஸஃபா மற்றும் மர்வாவை படைத்த அந்நாளில் இருந்தே ஹரமாக (புனித பூமியாக) ஆக்கிவிட்டான். இதனை மக்கள் ஹரமாக ஆக்கவில்லை. மாறாக அல்லாஹுத்தஆலா ஆக்கியுள்ளான். மறுமை வரை ஹரமாகும். எனவே அல்லாஹுத்தஆலாவின் மீதும் மறுமை நாள் மீதும் நம்பிக்கை கொள்கின்ற எவருக்கும் இந்த மண்ணில் ரத்தம் சிந்துவதோ அதன் மரத்தை வெட்டுவதோ ஆகுமானதல்ல. இது எனக்கு முன்னர் எவருக்காகவும் ஹலாலாக ஆகவில்லை. எனக்கு பின்னரும் எவருக்காகவும் ஹலால் ஆகாது. எனக்காக குறிப்பிட்ட நேரத்திற்காக ஹலாலாக ஆனது. பிறகு அதன் புனிதம் நேற்று எவ்வாறு இருந்ததோ அதேபோன்று திரும்பிவிட்டது. உங்களில் இங்கு உள்ளவர் இல்லாதவரிடம் அவர் உங்களிடம், அல்லாஹ்வின் தூதர் இதில் சண்டையிட்டார்களே? என்று கூறினால் அவரிடம் அல்லாஹுத்தஆலா இதனை தனது தூதருக்காக ஹலாலாக ஆக்கி இருந்தான். அவன் உங்களுக்காக ஹலாலாக ஆக்கவில்லை என்று கூறுங்கள்.

மக்களே! மக்களுள் எவர் இந்த புனித பூமியில் கொலை செய்வாரோ அல்லது தனது கொலையாளியை தவிர வேறு எவரையும் கொல்வாரோ அல்லது மடமை காலத்தின் கொலைக்கு பதிலாக கொலை செய்வாரோ அவர் அல்லாஹ் தஆலாவுக்கு எதிராக தைரியம் காட்டுபவர் ஆவார். ஹுஸாஆ சமுதாயத்தினரே! கொலை செய்வதை விட்டும் தவிர்ந்திருங்கள். நீங்கள் ஒருவரை கொன்றுள்ளீர்கள். நான் அவருக்கான இழப்பீட்டை வழங்குவேன். எனது பரிந்துரைக்குப் பிறகு எவரேனும் கொலை செய்வாரோ அவரது குடும்பத்தாருக்கு இரண்டு உரிமைகள் இருக்கும். அவர்கள் விரும்பினால் இழப்பீட்டை பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் நாடினால் அவரைக் கொன்று விடலாம்.

பிறகு அன்னார் ஹுஸாஆ கொலை செய்த அந்த மனிதருக்கான இழப்பீடாக நூறு ஒட்டகங்களை தம் தரப்பிலிருந்து வழங்கினார்கள்.

இந்நாட்களில்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை கொலை செய்யும் ஃபுஸாலா பின் உமைரின் புனிதமற்ற திட்டமும் வெளிப்பட்டது. அவர் கூறுகிறார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கஅபா ஆலயத்தை வலம் வந்து கொண்டிருந்தபோது நானும் அக்கூட்டத்தில் அன்னார் (ஸல்) அவர்களை நவூது பில்லாஹ் கத்தியால் குத்தி கொலை செய்யும் நோக்கத்துடன் அன்னாரது பின்னே சென்று கொண்டிருந்தேன். அன்னாரை நெருங்கியதும் அன்னார் அவரைப் பார்த்து நீங்கள் ஃபுஸாலா தானே? என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஆம் என்று கூறினார். உள்ளத்தில் என்ன சிந்திக்கிறீர்கள் என்று அன்னார் கேட்டார்கள். அவர் பொய்யுரைத்தார். மேலும் நான் அல்லாஹ்வை நினைவு கூர்கிறேன் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புன்சிரித்தார்கள். மேலும் அல்லாஹ்விடம் இஸ்திக்ஃபார் செய்யுங்கள். நீங்கள் எதனை கூறுகிறீர்களோ அதனை செய்யவில்லை என்று கூறினார்கள். மேலும் அன்னார் அருகில் வந்தார்கள். மேலும் அவரது நெஞ்சில் கை வைத்தார்கள். ஃபுஸாலா கூறுகிறார். இறைவன் மீது ஆணையாக! அன்னார் என் நெஞ்சில் இருந்து கையை எடுக்கவும் இல்லை. உலகில் அனைவரையும் விட அதிக நேசத்திற்குரியவராக எனக்கு முஹம்மது (ஸல்) அவர்கள் தென்பட்டார்கள்.

அவர் தனது வீட்டினரை நோக்கி திரும்பி சென்றார். மேலும் அவரது சிந்தனை முற்றிலும் மாறிவிட்டிருந்தது.

இந்நாட்களில்தான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது தந்தையார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவம் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. ஹஸ்ரத் உம்மு ஹானியின் வீட்டில் அன்னார் உணவு உண்ட நற்குறிப்பும் கிடைக்கின்றது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமாவிடமிருந்து அறிவிப்பு:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் நாளன்று ஹஸ்ரத் உம்மு ஹானியிடம், நாங்கள் உண்பதற்கு உம்மிடம் உணவு உள்ளதா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் காய்ந்த ரொட்டித் துண்டுகளைத் தவிர வேறொன்றும் இல்லை. மேலும் அவற்றை உங்களுக்கு வழங்க எனக்கு தயக்கமாய் இருக்கின்றது என்று கூறினார்கள். அன்னார் அதனையே கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். அன்னார் அவற்றை தண்ணீரில் நனைத்தார்கள். அவர் அதனுடன் உப்பை கொண்டு வந்தார். அன்னார் அவரிடம் ஏதேனும் குழம்பு இருக்கிறதா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே என்னிடம் வினிகரை தவிர வேறொன்றும் இல்லை என்று கூறினார். அன்னார் அந்த வினிகரை கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். அன்னார் அதனை உணவில் ஊற்றினார்கள். மேலும் அதிலிருந்து உண்டார்கள். மேலும் அல்லாஹ்வுக்கு நன்றி

செலுத்தினார்கள். பிறகு வினிகர் மிகவும் நல்ல குழம்பாகும். உம்மு ஹானியே! எவர் வீட்டில் வினிகர் இருக்கின்றதோ அவர் ஏழை இல்லை என்று கூறினார்கள்.

*ஹுஸூர் அன்வர் கூறுகிறார்கள்:* மேலான நன்றியுடைமையாகவும் இருக்கின்றது. மேலும் உம்மு ஹானி ரலியல்லாஹு அன்ஹாவை மனம் குளிரவும் செய்தார்கள். மக்காவை வென்றவரின் நிலை இதுவாக இருக்கின்றது. அனைத்தும் அனைத்து வீடுகளிலிருந்தும் கிடைத்திருந்திருக்கும். ஆனால் அன்னார் அந்த சிறிய காய்ந்த ரொட்டிகளின் துண்டுகளை கொண்டு பசியாறினார்கள். அன்னார் மக்கா சென்றடைந்ததும் அங்கு அனைத்தையும் கண்டு குறிப்பாக கஅபா ஆலயத்தை அன்புடன் காண்பதை பார்த்து அன்ஸார் உடைய உள்ளத்தில் அன்னார் இங்கேயே இருந்து விடுவார்களோ என்ற எண்ணம் தோன்றியது.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா அறிவிக்கின்றார்கள்: அன்ஸாரின் நிலை இவ்வாறு இருந்தது. ரஸூல் (ஸல்) அவர்கள் மீது அத்தருணத்தில் வஹீ இறங்கியது. மேலும் வஹீ முடிவடைந்ததும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "அன்ஸார் கூட்டத்தினரே! இம்மனிதர் மீது தேசத்தின் மீதான நேசம் மேலோங்கி விட்டது என்று எண்ணுகிறீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அவ்வாறே எண்ணுகிறோம் என்று கூறினார்கள். அதற்கு அவ்வாறென்றால், என்னுடைய பெயர் என்னவாக இருக்கும்? நான் முஹம்மத் ஆவேன். அல்லாஹ்வின் அடியானும் அவனது தூதுவனும் ஆவேன். நான் அல்லாஹுக்காக உங்களை நோக்கி ஹிஜ்ரத் செய்து வந்தேன். இப்போது எனது வாழ்வும் மரணமும் உங்களுடன்தான் என்று கூறினார்கள்.

அப்போது அவர்கள் கட்டுப்படுத்த முடியாமல் அழுதவாறு ரஸூல் (ஸல்) அவர்களை நோக்கி முன்னேறினார்கள். மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக நாங்கள் கூறியவை அனைத்தும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது இருந்த அதீத நேசம் மற்றும் தங்களது பிரிவினையின் அச்சத்தின் காரணத்தினால் தான் கூறினோம் என்று கூறலாயினர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிச்சயமாக அல்லாஹ் மற்றும் அவனது தூதர் உங்களுடைய வார்த்தைகளை ஆமோதிக்கின்றார்கள். உங்களுடைய காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூறினார்கள்.

லுஹர் தொழுகையின் நேரம் வந்ததும் அன்னார் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். எனவே அவர்கள் கஅபா ஆலயத்தின் கூரை மீது ஏறி பாங்கு கூறினார்கள். அறிவிப்பு உள்ளது, அன்னார் அன்றைய தினம் அனைத்து தொழுகைகளையும் ஒரே உளூவில் நிறைவேற்றினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் என்றும் செய்திராததை இன்று செய்தீர்கள் என்று கூறினார்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "நான் தெரிந்து கொண்டே

அவ்வாறு செய்தேன்” என்று கூறினார்கள். அறிஞர்கள் இதிலிருந்து அன்னார் தேவையின்போது இவ்வாறு செய்யும் சலுகையை குறிப்பிடுவதற்காக இந்த உதாரணத்தை நிலைநாட்டினார்கள் என்று விளக்குகிறார்கள்.

அச்சமயத்தில் அன்னார் பொதுவான பைஅத்தும் பெற்றார்கள். அன்னார் அவர்களிடம், அல்லாஹ்வின் மீது ஈமான் மற்றும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் இல்லை. மேலும் முஹம்மத் ஸல் அவனது அடியாரும் தூதரும் ஆவார்கள் என்ற சாட்சியத்தில் பைஅத் வாங்கினார்கள். ஆண்களிடமிருந்து பைஅத் வாங்கி முடிந்ததும் அன்னார் பெண்களிடம் பைஅத் வாங்கினார்கள். அந்த பெண்களுள் அபூ சுஃப்யானின் மனைவியும் இருந்தார்.

*ஹுஸூர் அன்வர் கூறினார்கள்:* எந்த குற்றவாளிகளை கொலை செய்ய கட்டளையிடப்பட்டதோ அவர்களை பற்றி எழுதப்பட்டுள்ளது. விளக்கமாக கூறுகிறேன். இது தொடர்பாக மக்களிடத்திலும் சில சந்தேகங்கள் உள்ளன. மேலும் சம்பவங்களும் இதனையே கூறுகின்றன. ஏனென்றால் எந்த காரணங்களின் அடிப்படையில் கொலை செய்ய கட்டளையிடப்பட்டதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதோ அவை வெளிப்படையாக ரஸூல் (ஸல்) அவர்களுடைய செயல் மற்றும் இயல்புக்கு முற்றிலும் முரணானதாக இருக்கின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் இது தொடர்பாக எழுதியுள்ள தமது கருத்தில் இவ்வாறு உள்ளது: வெறும் 11 ஆண்கள் மற்றும் நான்கு பெண்கள் பற்றி மட்டுமே அவர்கள் கடும் அநீதியான கொலை மற்றும் குழப்பங்களில் ஈடுபட்டார்கள் என்பது நிரூபணம் ஆகியுள்ளது. அவர்கள் போர் குற்றவாளிகளாக இருந்தார்கள். ரஸூல் (ஸல்) அவர்கள், அவர்கள் தொடர்பாக, கொலை செய்யப்பட வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார்கள். அவர்கள் நிராகரிப்பு மற்றும் சண்டையில் ஈடுபட்ட குற்றவாளிகளாக மட்டும் இருக்கவில்லை. மாறாக போர் குற்றவாளிகளாக இருந்தார்கள். ஆனால் அவர்களில் பெரும்பாலானோரை முஸ்லிம்களின் பரிந்துரையால் ரஸூல் (ஸல்) அவர்கள் விட்டுவிட்டார்கள்.

*இது தொடர்பான விவரங்களையும் அவற்றின் மறுப்பையும் எடுத்துரைத்த பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:* இஸ்லாத்தின் எதிர்ப்பில் முன்னணியில் இருந்த சில குறைஷிய தலைவர்கள் ரஸூல் (ஸல்) அவர்களது வருகை பற்றிய தகவல் அறிந்து மக்காவிலிருந்து ஓடி விட்டார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால் அவர்களுக்கு எதிராக கொலை செய்ய கட்டளையிடப்பட்டுள்ளது என்ற காரணத்தினால் ஓடிவிட்டார்கள் என்பது இப்னு இஸ்ஹாக்கின் கற்பனை மட்டுமே ஆகும். எவ்வாறாகிலும் மக்கா வெற்றியின் போது ஒரு சில நபர்களை மட்டுமே கொலை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

மேலும் அவர்கள் யார் என்றால், நீதிமானும் நியாயவானுமாகிய ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதைப் போன்று அவர்களில் சில மக்களுக்கு மட்டுமே, எவர்களுக்கு ஏக இறைவன் தரப்பிலிருந்து தீர்க்கமான கட்டளை இறங்கியதோ அவர்களுக்கே தண்டனை வழங்கப்பட்டது. அந்த சபிக்கப்பட்டவர்களை தவிர மற்ற அனைத்து எதிரிகளின் குற்றங்களும் மன்னிக்கப்பட்டன. ஆக இதுவே இதன் உண்மையாகும். எனவே அவதூறு பேசியதனாலும் நபித்துவத்தை அவமதித்ததாலும் இவ்வளவு நபர்கள் கொல்லப்பட்டார்கள் என்று பேசுவது அனைத்தும் தவறான விஷயங்களாகும். எஞ்சியவை இன்ஷா அல்லாஹ் இனிவரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

*ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:* உலகின் சூழ்நிலை உங்களுக்கு வெளிப்படையாகவே இருக்கின்றது. துஆக்கள் செய்து வாருங்கள். இதற்காக முன்னரும் பலமுறை கூறியிருக்கிறேன். இக்கட்டான சூழ்நிலைகளுக்காக மக்கள் சிறிது மாதங்களுக்கான ரேஷன் பொருள்களை எவ்வளவு வைத்திருக்க முடியுமோ வைத்திருக்க வேண்டும். தற்போது சில அரசாங்கங்களும் பிரஜைகளிடம் மூன்று மாதத்திற்கான ரேஷன் பொருள்களை வைத்திருக்குமாறு வலியுறுத்தியுள்ளன. அல்லாஹுத்தஆலா எவ்வாறாகிலும் உலகின் மீது கருணை புரியட்டும். மேலும் போரின் அச்சுறுத்தும் அபாயகரமான நிலையிலிருந்து காப்பாற்றுவானாக.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் அவர்கள் மதிப்பிற்குரிய ராஜா அப்துல் மாலிக் ஸாஹிப் அவர்களின் மனைவியும் ஷரீஃப் அஹ்மது ஸாஹிப் அவர்களின் மகன் வழிப்பேத்தியும், ஹஸ்ரத் நவாப் அமத்துல் ஹஃபீஸ் பேகம் சாஹிபா ரலியல்லாஹு அன்ஹாவின் மகள் வழிப் பேத்தியும், கர்னல் மிர்ஸா தாவூத் அஹ்மத் ஸாஹிபின் மகளுமாகிய* ***அமத்துந்நஸீர் நிகத் சாஹிபா*** *மற்றும் கானாவின் அஹ்மதிய்யா சீனியர் ஸ்கூலின் முன்னாள் தலைமை ஆசிரியரும், நேஷனல் தப்லீக் செகரட்டரீயுமாகிய* ***மதிப்பிற்குரிய அல்ஹாஜ் யாஃகூப் அஹ்மது பின் அபூபக்ர் ஸாஹிப்*** *அவர்களது நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ
يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)